CASE NO : OP 41/2025

NAME : WW1 – E. வேலு

DATE : 29.01.2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நடத்துநராக 1986 முதல் பணியாற்றி வருகிறேன். நான் 2012 முதல் 2021 வரையிலான காலகட்டத்திற்கு எந்தவிதமான ஊதிய உயர்வை வழங்காமல் எதிர்மனுதாரர் நிறுத்தி வைத்ததற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஊதிய உயர்வை நிறுத்தியதற்காக எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு கடிதம் எதுவும் அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். அந்த கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கடந்த 02.02.2021ல் பொது மேலாளருக்கு மனு தாக்கல் செய்துள்ளேன். ஆனால் அதுக்கான RPAD யோ அல்லது ரசீதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நேரடியாக Ex W3 மனுவை பொது மேலாளருக்கு கொடுத்தேன். ஆனால் நான் கொடுத்தற்கு எனக்கு எந்த ஒப்புகையும் தரவில்லை. அவ்வாறு தருவது பழக்கமும் இல்லை. ந.க.எண் 3070/2021

Ex W2 என்பது நான் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். அதற்கான உத்தரவும் கடந்த 02.12.2021 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது தான் Ex W5. இந்த உத்தரவு வந்த பின்பும் எதிர்மனுதாரர் நிறுவனத்தை அணுகி எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்றால் வைக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கடந்த 01.11.2012 ல் அடிப்படை ஊதியம் ரூ. 11395/- தர ஊதியம் ரூ. 2000/-, ஊதிய விகிதம் ரூ. 5200/- = 20200 படி ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. 01.11.2013 ல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுத்த போது என் பெயரில் G10/2012/09, dated 19.11.2012ல் எனக்கு ஒரு வருடத்தற்கு பின் தொடர்ச்சியுடன் ஊதிய உயர்வு நிறுத்திவைக்கப்பட்டது என்றும், G8A/8/13, தேதி 14.06.2014ன் படி 6 மாதத்திற்கு பின் தொடர்ச்சி இல்லாமல் ஊதிய உயர்வு நிறுத்திவைக்கப்பட்ட தண்டனையும், G8A/4257/13, Dated 12.06.2013, 3 மாதத்திற்கு பின் தொடர்ச்சி இல்லாமல் ஊதிய உயர்வு நிறுத்திவைக்கப்பட்ட தண்டனையும், G7/2355/12, Dated 25.06.2014, 3 மாதத்திற்கு பின் தொடர்ச்சி இல்லாமல் ஊதிய உயர்வு நிறுத்திவைக்கப்பட்ட தண்டனையும், G8A/3482/14, Dated 12.01.2012, 2 வருடத்திற்கு பின்

தொடர்ச்சியுடன் ஊதிய உயர்வு நிறுத்திவைக்கப்பட்ட தண்டனைகளும் வழங்கப்பட்டது என்றும், 11/2012 முதல் 01/2021 வரை 1225 நாட்கள் தகுதியில்லா நாட்களாக இருப்பதால் தான் ஊதிய உயர்வு தள்ளி வைக்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் எனக்கு ஊதிய உயர்வு தள்ளி போனது என்றும் அதற்கு பின்னிட்டு எனது ஊதிய உயர்வை 01.05.2022 முதல் காலாண்டின் தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் கொடுத்துவிட்டார்கள். ஆனால் எனக்கு அதற்கு முன்பாகவே 2012 ல் கொடுக்க வேண்டியது 2022ல் தான் வழங்கப்பட்டது. ஒழுங்குநடவடிக்கையின் படி ஊதிய உயர்விற்கு தகுதியில்லா பணி நாட்களுக்குண்டான தண்டனை வழங்கபடாமல் இருந்தால் தான் ஊதிய உயர்வுக்கு எடுத்து கொள்ளப்படும் என்று 12(3) ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்குண்டான ஒழுங்கு நடவடிக்கைகள் எதுவும் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் முடிக்கவில்லை மற்றும் சில வழக்குகளில் எந்தவித விசாரணையும் நடத்தாமல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. என்னுடைய ஓய்வு பலன்களை வாங்கி கொண்டு பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிர்மனுதாரர்

நிறுவனத்தை நான் அணுக வில்லை என்றால் சரியல்ல. 31.05.2024 ஓய்வு பெற்ற பிறகு எனக்குரிய பணபலன்கள் வழங்கபட வேண்டியதை காலதாமதமாக 31.12.2025 ல் தான் வழங்கினார்கள். எல்லா பலன்களையும் பெற்று கொண்டு எதிர்மனுதாரரை அழைக்கழிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,
முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.